பத்திரிக்கை செய்தி

சமூகப் பாதுகாப்புதுறை அலுவலகம் கெல்லீஸ்,புரசைவாக்கம்,நெடுஞ்சாலையில் பணிபுரிந்து வரும் நன்னடத்தை அதிகாரி திருமதி.N.திலகா க/பெ கார்த்திகேயன் என்பவர் நன்னடத்தை சான்றிதழ் வழங்க லஞ்சமாக ரூ.5000/- பெற்ற குற்றத்திற்காக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு சிறப்பு நீதிமன்றம் வழங்கிய தண்டனையை உயர்நீதிமன்றம் உறுதி செய்து தீர்ப்பு.

சென்னை உள்ளகரத்தை சேர்ந்த புகார்தாரர் திருமதி S.சாந்தி என்பவருடைய மகள் செல்வி S.நான்சிமேரி என்பவர் கடந்த 2010 மே மாதத்திலிருந்து சென்னை,புரசைவாக்கத்தில் உள்ள அரசு குழந்தைகள் காப்பகத்தில் இருந்து வந்துள்ளார், புகார்தாரர் தன் மகளை வீட்டுக்கு அழைத்துச் செல்ல காப்பகத்தில் உள்ள கமிட்டி தலைமை அதிகாரியிடம் கேட்ட பொழுது அவர் நன்னடத்தை சான்றிதழ் வாங்கி வரும்படி கூறியதின் பேரில் கடந்த 20.05.2011 ம் தேதி காலை 10.00 மணிக்கு மேற்படி காப்பகத்தில் உள்ள நன்னடத்தை அதிகாரி திருமதி.N.திலகா அவர்களிடம் தன் மகள் சம்மந்தமான அறிக்கையை அனுப்புமாறு கேட்டுள்ளார். அதற்கு நன்னடத்தை அதிகாரி திருமதி.N,திலகா மேற்படி அறிக்கையை அனுப்ப ரூ 5000/- மற்றும் கோத்ரேஜ் பிரிட்ஜ் வாங்கி தரவேண்டும் என்று லஞ்சமாக கேட்டுள்ளார். லஞ்ச பணத்தை கொடுக்க விருப்பமில்லாத புகார்தாரர் கடந்த 24.05.2011 ஆம் தேதி அன்று லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் அளித்ததின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 24.05.2011 ம் தேதி பகல் சுமார் 12.00 மணியளவில் புகார்தாரர் திருமதி.S.சாந்தி, சென்னை, கெல்லீஸ், புரசைவாக்கம் நெடுஞ்சாலையில் உள்ள அரசு குழந்தைகள் காப்பகத்திற்கு சென்று நன்னடத்தை அதிகாரி திருமதி.N.திலகா அவர்களை சந்தித்து தனது மகள் சம்மந்தமான அறிக்கையை கேட்டுள்ளார். அதற்கு திருமதி.N.திலகா அவர்கள் முன்பு கேட்ட ரூ 5,000/- மற்றும் கோத்ரேஜ் பிரிட்ஜ் கொடுக்கும்படி கூறியுள்ளார். அதன் பேரில் புகார்தாரர் லஞ்ச பணமான ரூ 5,000/- எதிரி திருமதி.N.திலகா அவர்களிடம் கொடுத்தார். இதன் தொடர்ச்சியாக திருமதி.N.திலகா லஞ்ச ஒழிப்புத் துறையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு ஒப்படைக்கப்பட்டார்.

இது தொடர்பான வழக்கு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு சிறப்பு நீதிமன்றம் சென்னையில் நடைபெற்று வந்த நிலையில் கடந்த 05.01.2018 ம் தேதி எதிரி மீது குற்றம் நிருபிக்கப்பட்டு 3 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் ரூ 2,000/- அபராதமும் விதிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து எதிரி சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு சிறப்பு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து வழக்கு நடைபெற்று வந்தது. இந்த நிலையில் நேற்று (18.12.2023 ம் தேதி) மேற்கண்ட வழக்கின் குற்றவாளி திருமதி.N.திலகா நன்னடத்தை அதிகாரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றம் நிருபிக்கப்பட்டு அவருக்கு ஒரு வருடம் தண்டனை விதித்து மாண்புமிகு உயர் நீதிமன்றம் நீதிபதி அவர்களால் தீர்ப்பு வழங்கப்பட்டது.

<u>**PRESS NOTES**</u>

**The High Court upheld the conviction of Mrs.N.Thilaga W/o.Karthikeyan, a Probationary Officer working at Social Defence Department Office, Kelleys, Purasaiwalkkam High Road, for the crime of fraudulently obtaining bribe Rs.5000/- for issuing a certificate of good conduct**.

Selvi.Nancy Meri, the daughter of complainant Tmt.S.Shanthi had been kept at Children's home at Puraisaiwalkkam, Chennai. In order to take her daughter Selvi.Nancy Meri to her house, the complainant Tmt.S.Shanthi approached Tmt.N.Thilaga, Central Chennai Probationary officer on 20.05.2011 at about 10.00 hrs for seeking good conduct report for her daughter. For that Tmt.N.Thilaga demanded bribe money Rs.5000/- and Godrej fridge.

The complainant was not willing to give the demand amount sum of Rs.5000/- and Godrej fridge. She lodged a complaint on 24.05.2011 at about 10.00 hrs with Inspector of Police, DVAC, Chennai. Then the case was registered U/s 7& 13(2) r/w 13(1)(d) of Prevention of Corruption Act 1988.

In pursuance of the above said demand, on 24.05.2011 at 10.00 hrs at the office of the Social Defence Department, Purasaiwalkkam, High Road, Kelleys, Chennai, the complainant met the accused Tmt.N.Thilaga and asked about the report of her daughter. The accused Tmt.N.Thilaga reiterated her earlier demand of Rs.5000/- and Godrej Fridge and accepted Rs.5,000/- to hand over the report. Subsequently the accused Tmt.N.Thilaga was arrested and remanded to Judicial custody. The case was tried at the Special Court, Chennai.

On 05.01.2018 the Special Court, Chennai delivered the judgment. The accused Tmt.N.Thilaga was found guilty for commission of offence u/s 7 and 13(2) r/w 13(1)(d) of Prevention Corruption Act,1988. The accused Tmt.N.Thilaga was sentenced to undergo 1 year Rigorous Imprisonment and shall pay a fine of Rs.1000/- in default undergo 3 months Simple Imprisonment, u/s 7 of Prevention of Corruption Act, 1988.

The accused was sentenced to undergo 2 years rigorous imprisonment and shall pay a fine of Rs. 1000/- in default to undergo 3 months simple imprisonment u/s 13(2) r/w 13(1)(d) of Prevention of Corruption Act, 1988. The sentence of imprisonment imposed for each offence shall run concurrently.

The accused appealed against the Special Court Judgment before the Hon'ble High Court. Yesterday (18.12.2023) this case came up for hearing and the Hon'ble High Court dismissed the Criminal Appeal and the accused is sentenced to undergo 1 year simple imprisonment.